[illegible]
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் ஆறு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 17 பிரசோற்பத்தி பங்குனி 10 (23 . 03 1992) திங்கள்

ஜே. வி. பி கஸட்டுகள் தெற்கில் விநியோகம்

ஜே வி பியின் புதிய தலைவர் சோமவன்ச அமரசிங்க இப்போது கஸட் நாடாக்கள் மூலமும் இலங்கைக்கு செய்திகள் அனுப்புகிறார் அண்மையில் இவரது செய்திகள் அடங்கிய கஸட் தொகுதி ஒன்று இலங்கைக்கு வந்து சேர்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த கஸட்டுகள் இப்போது தென்னிலங்கை முழுவதும் இரகசியமான முறையில் பரவலாக விநியோகிக்கப்பட்டு வருகிறது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன,

டாங்கிகளை எதிர்க்கும்படைப்பிரிவு

புதிதாக புலிகளால் உருவாக்கம்

மணலாறில் முதல் தாக்குதல் நடத்தியது

ஸ்ரீலங்கா இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளுக்கென சீனாவில் இருந்து புதிய டாங்கிகளை கொள்வனவு செய்து பயன்படுத்தும் இவ்வேளையில் அதை எதிர்கொள்ள புலிகளும் ஒரு புதிய படைப்பிரிவை உருவாக்கியுள்ளனர்.

டாங்கிகளை மட்டுமே எதிர்கொள்ளும் டாங்கி எதிர்ப்பு படையை (Anti Tank Squad) புலிகள் தற்போது உருவாக்கியுள்ளனர் என கொழும்பு வாரப்பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

டாங்கிகளை தாக்க நன்கு பயிற்சிபெற்ற வீரர்களைக் கொண்டு இச் சிறப்புப் படையை புலிகள் உருவாக்கியுள்ள தகவல் தற்போது இராணுவத்திற்கு கிடைத்துள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

மணலாறில் முதலடி

இந்த டாங்கி எதிர்ப்பு பிரிவினர் தமது முதல் தாக்குதலை மணலாறு கொக்குத்தொடுவாயில் ஆரம்பித்தனர் மோதலின்போது இவர்களின் ரொக்கட் ஒன்று படையினரின் கவசவாகனம் ஒன்றில் வீழ்ந்து வெடித்தது. இதனால் ஒரு சிப்பாய் பலியானார் வாகனத்திலிருந்த ஏனையோர் செவிப்பறை சேதமடைந்த நிலையில் வாகனத்தை கைவிட்டு தப்பியோடினர், (06 ஆம் பக்கம் பார்க்க)

தள்ளாடி இராணுவ முகாமில் படையினர் குவிப்பு!

மன்னார் தாழ்வுபாடு கடல் வழியாக கடந்த திங்கட் கிழமையிலிருந்து தள்ளாடி இராணுவ முகாம் பகுதியில் ஆயிரக்கணக்கான அளவில் படைகள் மற்றும் ஏராளமான தளபாடங்கள் குவிக்கப்பட்டுவருகின்றன

இதுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் பவள் கவச வண்டிகள், கனரக வாகனங்கள் ஆகிய அரசப் படைகளால் கடல் வழியாக கொண்டு வரப்பட்டு பின்னர் தள்ளாடி முகாமை நோக்கிச் செல்கின்றன,

இது இவ்வாறு இருக்க படையினரும் கடற்படைக் கப்பல்களில் கொண்டுவந்து குவிக்கப்பட்டு வருகின்றனர் என அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். (07)

★ அமைச்சர் செல்லச்சாமி கூறுகிறார்

இந்தியாவின் கோரிக்கைகள் சமாதானப் பேச்சை பாதிக்காது

விடுதலைப்புலிகளை இந்தியா தடைசெய்வதாலோ அல்லது அதன் தலைவர் பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்தியா கோருவதாலோ புலிகளுடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சு நடத்த எடுக்கும் முயற்சிகள் பாதிக்கப்படமாட்டாது

இவ்வாறு அமைச்சர் எம் எஸ் செல்லச்சாமி தெரிவித்துள்ளார் இந்தியா செல்லுமுன்ன அவர் செய்தியாளர்களிடையே பேசினார்

இதேவேளை இனப்பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவுடன் பேச்சு நடாத்த முன்வந்திருப்பதற்கு எந்தத்தடையும் இருக்காது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்

விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசிற்கும் பேச்சுவார்த்தைகள் நடக்கக்கூடிய சாத்தியங்கள் ஏற்படுமானால் இந்தியாவின் கோரிக்கை நிர்ப்பந்தங்களை ஸ்ரீலங்கா புறக்கணிக்கும் நிலை ஏற்படலாம் என செய்தியாளர்களை மேற்கோள் காட்டி ஏ ஜெ என் வி செய்திகள் தெரிவித்தன

● மூன்று வேங்கைகள் வீரச்சாவு

பொலநறுவை மோதலில் 5 துப்பாக்கிகள் மீட்பு

பொலநறுவைப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பல ஆயுதங்களும் மீட்கப்பட்டன

பொலநறுவைக்குவாம்டேல இராணுவமுகாமிலிருந்து சிங்கபுர முகாமிற்கு பவல் கவசவண்டி சகிதம் 65 இராணுவத்தினர் வந்தபோது மோதல் ஏற்பட்டது

புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவடைந்தனர்

மீட்கப்பட்ட ஆயுதங்கள்

- ஏ. கே. எம். எம். ஜி - 01
- ரம் மகஸீன் - 03
- ஏ. கே. எல் எம் ஜி ரவைகள் - 454
- டொங்கான் - 01
- இறங்குரிய ஷெல்கள் - 13
- ரி-56 - 01
- ரி-81 - 02
- ரி-56 மகஸீன் - 12

...06 ஆம் பக்கம் பார்க்க

ஒட்டுசுட்டானில் நேற்றும் குண்டு வீச்சு

நேற்று காலையும் ஒட்டுசுட்டான் பகுதியில் விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றது காலை 6, 40 மணியளவில் இப்பகுதிக்கு வந்த 2 பொம்மர்கள் 4 குண்டுகளை வீசின இதில் ஆலயம், சின்னத்தம்பி பாடசாலை என்பன சேதமடைந்தன.

14 ஆம் கட்டைப்பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சில் வீடு ஒன்று சேதமடைந்தது கால்நடை ஒன்றும் பலியானது

வங்காலையில் பல வீடுகள் படையினரால் தரைமட்டம்

வங்காலைப் பிரதேசத்தில் உள்ள மக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் வெளியேறியதையடுத்து அங்கு நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் சகல வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளனர்.

பல வீடுகள் புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்கப்பட்டும் சகல வீட்டுப்பொருள் இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது'

கடந்த மார்கழி மாதம் இராணுவத்தினர் வங்காலை மக்கள் சென்று பார்க்க அனுமதி வழங்கியதாகவும் பின்னர் அப்பகுதிமக்கள் சென்று பார்த்தபோது இப்படியான நிலையிலிருந்ததையடுத்து இராணுவ அதிகாரிகளிடம் தெரிவித்தபோது இது பற்றித் தங்களுக்குத் தெரியாது என அறிவித்தார்களாம். 07

உலகக்கோப்பைக் கிரிக்கெட்

இங்கிலாந்திற்கு மழை கைகொடுத்தது

ஐந்தாவது உலகக்கோப்பைக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற மற்ற ஒரு அரையிறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணி அதனை எதிர்த்து ஆடிய தென்னாபிரிக்க அணியை 20 ஓட்டங்களால் தோற்கடித்தது

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 45 ஓவர்களில் 6 விக்கற்றுகள் இழப்பிற்கு 252 ஓட்டங்களைப் பெற்றது. கிறஹம்கூச் 83 ஓட்டங்களையும் இருபேட் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி அதன் துடுப்பாட்டத்தில் ..06 ஆம் பக்கம் பார்க்க

போட்டி முடிவு குறித்து அணி கப்டன்கள் கருத்து

உலகக்கோப்பை கிரிக்கெட்டின் நேற்றைய அரையிறுதி ஆட்டத்தின் முடிவு குறித்து இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளின் கப்டன்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்

இங்கிலாந்து அணியின் கப்டன் கிரஹம் கூச் கருத்துத் தெரிவித்தபோது உலகக் கோப்பைத் தொடரில் இந்த புதிய சட்டமுறை அதிருப்தி அளிப்பதாகவும் இச்சட்டத்தினால் இறுதியாட்டத்தில் ஆட தமது அணி தகுதி பெற்றுள்ளது எனவும் கூறினார்.

தென்னாபிரிக்க அணியின் கப்டன் கப்லர் வெசல்ஸ் சட்டத்தின் விதிமுறைக்கு தமது அணி பலியாகிவிட்டது என்றார்.

அரையிறுதியாட்டம் ஒருஉயிரைப்பலிகொண்டது!

கடந்த சனியன்று உலகக் கோப்பைத் தொடர் அரை இறுதியாட்டத்தில் நியூசிலாந்து எதிர் பாகிஸ்தான் ஆட்டம் ஓர் உயிரைப் பலியெடுத்தது.

ஆட்டத்தை தொலைக் காட்சியில் பார்த்துக் கொண்டிருந்த பங்களாதேஷ் வாசியொருவர் நியூசிலாந்து பாகிஸ்தான் ஓட்டத்தை விரட்டிக் கொண்டிருந்ததை விட்டு பதற்றமடைந்தார்.

இதனால் நெஞ்சுவலி கண்டு அவர் உயிரிழந்தார்.

நுகர்வோரின் புகார்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை

நல்லூர் பிரதேச வர்த்தக சங்கத்தின் பணிமனை திருநெல்வேலி சந்தி பலாலி வீதியில் உள்ள மாடிக் கட்டிடத்தின் மூன்றாவது மாடியில் திறந்து வைக்கப்பட்டது.

பொதுமக்கள், வர்த்தகர்கள், பாவனையாளர்கள் ஆகியோர் வர்த்தகம் சம்பந்தமான தமது முறைபாடுகள், தேவைகள் முறைப்பாடுகள், கருத்துக்கள் போன்ற விவரங்களைத் தெரிவிப்பதற்காக பதிவேடு ஒன்றும் இந்தப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளது. பதிவேட்டில் பதியப்படும் புகார்கள், ஆலோசனைகள் குறித்து உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது 41

பாவமும் அகம்பாவமும்

''இந்திரா காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜி. கே. மூப்பனாரைத் தூக்கி அடித்தது நான்தான்'' என்று கூறியிருக்கிறார் ஜெயலலிதா? மூப்பனார் பாவம், ஜெயலலிதா அகம்பாவம்.

தமிழக வார இதழ் ஒன்றின் கேள்வி - பதில் பகுதியிலிருந்து இது வெளியிடப்படுகிறது

மகாபொல பரிசுத்திட்ட வைபவம் 30ஆம் திகதி

மகாபொல புலமைப்பரிசுத் திட்ட வைபவம் இம் மாதம் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மாத்தளையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்திற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

வருடந்தோறும் நடைபெறும் இந்த வைபவம் கடந்த வருடம் குருநாகலில் கோலாகலமாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. 18

உலகக் கிண்ண கிரிக்கெட்; 'முரசொலி' வினாவிடை போட்டி

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்பாக வாசகர்களுக்கான போட்டியொன்றை நடத்த முரசொலி முன்வந்துள்ளது.

கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்களும் இப் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

போட்டிக்கான வினாக்கள் இவைதான்:—

(1) ஐந்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் முதலாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(2) இரண்டாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(3) இத் தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(4) இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(5) முதலாவது உலகக் கிண்ணப் போட்டி
   (அ) எங்கு நடைபெற்றது?
   (ஆ) எப்பொழுது நடைபெற்றது?

★ இப் போட்டியில் முரசொலியில் கடமையாற்றுபவர்களைத் தவிர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

★ விடைகள் யாவும் முரசொலியில் பிரசுரமாகும் படிவங்களிலேயே அனுப்பப்படவேண்டும்.

★ ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் கீழ்வரும் படிவத்தில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

முதலாம் பரிசு:- ரூபா. 250
இரண்டாம் ,, ,, 150
மூன்றாம் ,, ,, 100

விடைகள் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு பிந்தாமல் முரசொலிக்கு நேர்முகமாகவோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையில் ''உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி'' எனக் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:- சரியான விடைகள் பல கிடைக்குமிடத்து குலுக்கல் முறையில் பரிசில்கள் தீர்மானிக்கப்படும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் முரசொலி வினாவிடைப் போட்டி

பெயர்: ....
முகவரி: ....
....
மாணவராயின் பாடசாலையின் பெயர்: ....
விளையாட்டுக் கழக அங்கத்தவராயின் கழகம் பெயர்; ....

....
திகதி கையொப்பம்

யாழ் மாவட்ட அகதி முகாம்களில் நீர் விநியோகப் பிரச்சினை

தற்போது வலுவடைந்து வரும் வறட்சி காரணமாக யாழ் மாவட்டத்திலுள்ள அநேகமான அகதி முகாம்கள் நீர் விநியோகப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

மேற்கிணறுகள் பல ஏற்கெனவே வற்றிவிட்டன. ஏனைய கிணறுகளின் நீர்மட்டமும் குறைந்து கொண்டு போகின்றது.

இதனால் அகதிகள் குடிநீர்ப் பற்றாக்குறையை மட்டுமன்றி ஏனைய பாவனைகளுக்கும் நீர் வசதியின்றி கஷ்டப்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

நீர் விநியோகப் பற்றாக்குறையினால் மலசலகூடங்கள் பராமரிப்பு, குளித்தல், துணிகள் கழுவுதல் போன்ற அவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் சுகாதாரச் சீர்கேடு ஏற்படக்கூடிய ஆபத்தான சூழ்நிலை உருவாகியுள்ளது.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இவ்விடயத்தில் உடன் கவனம் செலுத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

குழாய் நீரில் அழுக்குப் பொருள்

எகலியகொட மக்கள் பயன்படுத்தும் குழாய் நீரில் மலமும் வேறு அழுக்குப் பொருள்களும் இருப்பது தெரியவந்துள்ளது.

அங்குள்ள மக்களின் முறையீட்டைத் தொடர்ந்து வைத்திய ஆராய்ச்சி நிலையம் தண்ணீரைப் பரிசோதித்த போது சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கக்கூடிய மேற்கூறிய பொருள்கள் இருப்பதைக்கண்டுபிடித்தனர்

கோழி நோய்

வடமராட்சிப் பகுதியில் கோழிகளுக்கு நோய் ஏற்பட்டுள்ளதையடுத்து, இப் பகுதிக் கோழிகள் தினமும் மரணமாகின்றன.

நிவாரணம்

பருத்தித்துறை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு யாழ் செயலகம் பணிப்பின்பேரில உலர்உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. (01

போட்டி

வடமராட்சி கல்விக் கோட்டமட்டத்திலான தமிழ்த் தினப் போட்டி இம் மாதம் 28 29 ஆம் திகதிகளில் (சனி, ஞாயிறு) பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நடைபெறும். (01)

கணிதம் கற்பிக்க உதவும் உபகரணம் தயாரிக்க போட்டி

யாழ் மாவட்டத்திலுள்ள ஆண்டு 6 தொடக்கம் 11 வரை உள்ள மாணவர்களுக்கு கணிதம் கற்பிக்க உதவி செய்யக்கூடிய உபகரணங்களை தயாரிக்கும் போட்டியொன்றை ஆசிரியர்களிடையே நடத்த யாழ் கல்வித்திணைக்கள விஞ்ஞானத்துக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ. வேதநாயகம் தீர்மானித்துள்ளார்.

இவ்வுபகரணங்களை போட்டியில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தயாரித்து தமது பெயர், பாடசாலை என்பவற்றுடன் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக தமது விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

சிறந்தவையாக தெரிவு செய்யப்படும் ஆக்கங்களுக்கு கணித தினத்தன்று சான்றிதழ் யாழ் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது. 15

தீவக ஆசிரியர் சம்பளம் யாழ்ப்பாணத்தில் வழங்கவும்

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, வேலணை, மண்டைதீவு ஆகிய தீவுகளைச் சேர்ந்த 95 வீதமான பெற்றோர்களும் மாணவர்களும் ஆசிரியர்களும் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் தீவகத்துக்கு மீண்டும் திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலை இதுவரை இல்லாதமையினால் தீவக ஆசிரியர்களின் சம்பளங்களைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இயங்கும் வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகம் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரி சி. புவனேந்திரன் மகஜர் ஒன்றை கல்வி இராஜாங்க அமைச்சருக்கு யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் மூலம் அனுப்பியுள்ளார். 15

சட்டத்தரணி மீது பொலிசார் தாக்கு

சட்டத்தரணி ஆரியதிலக என்பவர் பொலிஸாரால் தாக்கப்பட்டது சம்பந்தமாக சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு முறையிட்டுள்ளது.

திரு ஆரியதிலக உடுகம பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவர் மீது பொய்யான வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

பொலிஸ்மா அதிபருக்கும் முறையிட்டுள்ள சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸார் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளும்படி வற்புறுத்தியுள்ளது. திரு. ஆரியதிலக [illegible] பிரதேச சபையின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது:

ஊர்காவற்படை அச்சுறுத்தல்

மஞ்சத்தொடுவாய் அகதிகளை மீண்டும் குடியமர்த்துவது தொடர்பாக மகாநாடு ஒன்று நடைபெற்றது.

இவ்வகதிகள் மீளக் குடியமர்தலில் ஊர்காவற்படையின் அச்சம் தடையாக உள்ளது என்று அங்கு முறையிடப்பட்டது. (16)

உற்றார் உறவினர் நண்பர்களுக்கான
வடபகுதி தனியார் உணவு விநியோகம்

எமது 20-03-92 திகதியிட்ட பத்திரிகை அறிவித்தல் தொடர்பாக, கீழ்வரும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விநியோகம் நடைபெறுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம் மிகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பின்பு அறிவிக்கப்படும்.

தயவு செய்து வெற்றுக்கலங்கள், வெற்றுப்பைகள் அடையாள அட்டை அல்லது அத்தாட்சி சான்றிதழ் ஆகியவையுடன். விநியோகத்திற்கான பதிவு சின்னத்தையும் கொண்டுவரவும்.

அனுப்பிவைக்கப்பட்ட மண்ணெண்ணெய் கிடைக்காததால் பிறிதொரு திகதியில் விளம்பரப்படுத்தி விநியோகிக்கப்படும்.

உ. அ. அ பிரிவு	இடம்	திகதி	நேரம்
1 உடுவில்	பிரதான களஞ்சியம் AIK AYES முத்துகிருஷ்ணர் வீதி (நாகம்மா இனிமா முன் ஒழுங்கை) சுன்னாகம்	24. 3. 92	8. 00 - 5. 00
2 தெல்லிப்பளை	,	25. 3. 92	8. 00 - 5. 00
3 கோப்பாய்	நாவலர் வித்தியாலயம் முன்பாக நாவலடி கோப்பாய்	27. 3. 92	8. 00 - 5. 00
4 சங்கானை	உ. அ அதிபர் பணிமனை முன்பாக பிரதான வீதி சங்கானை	29. 3. 92	8. 00 - 5. 00
5 சண்டிலிப்பாய்	கிராமசேவையாளர் அலுவலகம் அருகில் மாசியப்பிட்டி	31. 3. 92	8. 00 - 5. 00

AIKAYES - Jaffna
முத்துகிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

03049

★ பிறப்புச் சான்றிதழ் வழங்கல்:

நடைமுறைகளுக்காக நடைபழகும் மக்கள்

- சங்கர்.

யாழ்ப்பாணம் அரசசெயலகத்திற்குச் செல்லும் எவரும் கவனிக்கும் முக்கிய நாளாந்தக் காட்சி செயலகத்தின் மேற்குப் புறத்தில் ஒரு ஜன்னலுக்கு வெளியே நீண்டவரிசையில் மக்கள் நிற்பதுதான்.

இந்த ஜன்னலுக்கு உள்ளேதான் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்களைப் பெறும் அலுவலர்கள் சேவையாற்றுகின்றனர்.

வெளியே நிற்கும் - நிற்க வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு வெயிலைத் தாங்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் விலகினால் வரிசை உரிமை போய்விடுமென்ற பயம் வேறு!

இவர்கள் மத்தியில் சென்று அமைதியாக நாம் நின்று நிலைமையை அவதானித்தோம், குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பிரயாண கஷ்டங்களுக்கு மத்தியில் அவசிய தேவைகளுக்காக - பாடசாலை அனுமதிமுதல் ''பாஸ்போட்'' எடுப்பது வரை - பிறப்புச் சான்றிதழ் பெற விண்ணப்பிப்பவர்களும், விண்ணப்பித்து விட்டு அவையால் வழங்கப்படாமை அடிக்கடி கச்சேரிக்கு நடை பழகும் மக்களும் அவர்களுக்குள்ளேயே வேதனைகளையும், வெறுப்பையும், விரக்தியையும் பகிர்ந்து கொள்வதைப் பார்க்கலாம், கேட்கலாம்.

''எத்தனை நாளுக்குத்தான் இப்படி அலைவது. இவர்களுக்கு மனச்சாட்சி இல்லையா?'' என்று கேட்பவர்கள் சிலர்.

''அதோபார் அவரைப் பிடித்தால் ஒரு மாதிரி எடுக்கலாம்'' என்று சொல்லும் சிலர்.

''உரிய மாதிரி உரியதை தரகராக திரிகிறவர்களிடம் கொடுத்தால் தான் காரியம் முடியும்'' என்று கூறும் பலர்.
இவர்களையே நாம் பார்த்தோம்.

இத்தனைக்கும் இந்த அலுவலகத்துக்குப் பொறுப்பான அதிகாரிக்கு இவைகளெல்லாம் எட்டுவதுமில்லை, தெரிவதுமில்லைப் போலவும் இருக்கிறது.

இந்தக்காட்சி இன்று நேற்று அல்ல பல காலமாகவே மேடையேறுகிறது... ஆனால் தீர்வும் இல்லை, தீர்ப்பாரும் இல்லை! பாவம் பொதுமக்கள்!

ஏன் இந்த நிலை என்று ஆராய்ந்தால், பல திடுக்கிடும் தகவல்கள்.

இதுவரை முப்பதாயிரம் பிறப்புச்சான்றிதழ் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன'

1954 ஆம் ஆண்டிற்குப்பின்னர் பிறந்தவர்களது விண்ணப்பங்களே இப்படித் தேங்கிக் கிடக்கின்றன. இவர்களுக்கான சான்றிதழ் இருபக்கங்களில் வழங்கப்பட வேண்டும், அதற்கான படிவங்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாக யாழ். செயலகத்திற்கு வந்து சேரவில்லையாம்.

1954 ஆம்ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கே- 38 வயதுக்கு உட்பட்டவர்களே, பிறப்புச் சான்றிதழ்கள் அதிகம் தேவை என்பது எவருக்கும் தெரிந்த விடயம். இப்படியானவர்கள் தினமும் நூற்றியைம்பது விண்ணப்பங்கள் வரை சமர்ப்பிக்கின்றனர்.

ஆனால் ஒருநாளைக்கு 40-45 பிறப்புச் சான்றிதழ்களை மட்டுமே எழுதி வழங்கப்படக் கூடியதாக உள்ளது.

எனவே இரண்டு வருடங்களுக்கு முன்பு விண்ணப்பித்தவர்கள் கூட இன்னும் அலைகின்றனர்

பிறப்புச்சான்றிதழ்கள் வழங்கவென; தலா 100 படிவங்களைக் கொண்ட 300 புத்தகங்கள் கொழும்பு பதிவாளர் நாயகம் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது அதில் 289 புத்தகங்களே செயலகத்துக்கு கிடைத்துள்ளன. மீதி 11 புத்தகங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அதிகாரிகளிடையே குழப்பம் நிலவுகிறது.

மேலுள்ள தரவுகளைக் கவனித்தால் தேங்கியிருக்கும் 30,000 விண்ணப்பங்களை நாளாந்தம் 45 பிறப்புச்சான்றிதழ்கள் வீதம் வழங்க கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் ஆகும்.

அந்த இடைக்காலத்தில் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்ய மேலும் நான்கு வருடங்களாகும்.

இப்படியே தாமதங்கள் நீண்டுகொண்டே போகும். நாளாந்த மக்கள் வரிசையும் நீண்டு கொண்டே போகும்- மக்களும் நாளாந்தம் நடைபழகிக் கொண்டேயிருப்பர்!

மக்களின் பிரச்சினைகள் அரச அதிபருக்கும், மேலதிக பதிவாளர் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கும் தெரியாமல் இருக்க முடியாது தெரிந்திருப்பதால் தீர்வு காண்பதும் அவர்களின் பொறுப்பாகும்.

அண்மையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பதற்கு பிறப்புச் சான்றிதழ் தேவைப்படுவோர் உரிய விபரங்களை கிராமசேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்களினூடாக அனுப்பி வைத்தால் மேலதிக பதிவாளர் அவற்றைப் பரிசீலித்து உறுதிப்படுத்துவார் என அரச அதிபர் அறிவித்தார்.

இப்படி பாடசாலை அனுமதி தொடர்பாகவும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இவையெல்லாம்; அதிகாரிகள் தனித்த தீர்வுகளை அமுல் செய்ய முயல்வதையே காட்டுகிறது. ஆனால் மக்களை பல அலுவலகங்களுக்கு நடைபழகவும், அலைக்கழிக்கவும் செய்யும் என்பதையும், தேவையற்ற விதத்தில் சில அதிகாரிகளின் முக்கியத்துவம் அதிகரிக்கப்படுவதையும் அரச இயந்திரத்தினர் கவனிக்கவேண்டும், அதேநேரம் அவர்களது வேலைப் பளுவையும் இவை அதிகரிக்கும்.

அண்மையில் இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்முகமாக ரூபா 11/= ஐ அறவிடுவதன் மூலம் நிழற்பிரதிகளை வழங்குவதற்குத் திட்டமிட்டு கட்டணமும் அறவிடப்பட்டது சுமார் 500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற நிலையில் கொழும்பிலிருந்து பிறப்புச் சான்றிதழ் வழங்கும் படிவப் புத்தகங்கள் கிடைக்கப் பெற்றதும் இந்நிழற்பிரதி வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது.

அதிகாரிகள் மட்டத்தில் அலுவலர்கள் பற்றாக்குறை இந்தத் தாமதங்களுக்கு முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. நிழற்பிரதி வழங்குவதற்கும் நடைமுறைகள் தடையாகவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல சந்தர்ப்பங்களில் ஏதாவது செய்து அவசிய தேவைகளையாவது பூர்த்தி செய்துவிட வேண்டுமென இவர்கள் முயல்வதையும் காணமுடிகிறது.

ஆனால் இவையெல்லாம் பிரச்சினைகளைத் தீர்க்க உதவவில்லையென்பதை அவர்கள் உணரவேண்டும்.

அவசர தேவையில்லாமல் யாரும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க மாட்டார்கள், விண்ணப்பங்களைத் தமக்கு ஏற்றவாறு அதிகாரிகள் தரம்பிரிப்பது மக்களின் கோணத்திலிருந்து பார்த்தால் முறையற்றது'

மக்களைப் பொறுத்தவரை பிறப்புச்சான்றிதழ்கள் தாமதமின்றிக் கிடைக்க வேண்டும், அதுவே அவர்களின் கருத்தும், கோரிக்கையும்,

அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது அதிகாரிகளின் கடமை, அலுவலர்கள் பற்றாக்குறை, படிவங்கள் பற்றாக்குறை, உபகரணங்கள் பற்றாக்குறை என்பனவெல்லாம் விளக்கங்களே தவிரத் தீர்வுகள் அல்ல, மக்களுக்கு விளக்கம் பற்றி அக்கறையிருக்க வேண்டியதில்லை,

இந்தப் பற்றாக்குறைகள் எல்லாம் மேலிடம் அமுல் செய்யும் நடைமுறைகள் காரணமாகவே எழுகின்றவை என்பது உண்மையே, ஊழியர் பற்றாக்குறை என்றால் தற்காலிக ஆட்களை நியமித்துச் செயற்பட வேண்டும். அதிகாரிகள் நியாயமான நடைமுறைகளுக்கு கட்டுப்பட வேண்டியவர்கள் என்பதும் உண்மையே,

அதேநேரம் நடைமுறைகளினால் மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்கினால் அவற்றைச் சுட்டிக்காட்டி தீர்வு காண வேண்டியவர்களும் அவர்களே,

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சகலரும் ஒருங்கிணைந்து செயற்பட்டு இனிமேலாவது நடைமுறைகளுக்காக மக்கள் நடைபழகும் நிலையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும். அப்படிச் செய்வார்கள் என்று நம்புவோமாக.

★ ஹமில்டன் எச்சரிக்கை

கார்க்குண்டு பொருத்தும் நிபுணர்கள் 'கொழும்பில்!

கார்க்குண்டு பொருத்துவதில் நிபுணர்களான மூன்று விடுதலைப்புலிகள் கொழும்பில் நுழைந்துள்ளதாகக் கூட்டுப் படைகளின் தளபதி ஹமில்டன் வணசிங்க கூறியுள்ளதாக நேற்று 'லங்காதீப' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளைத் திசை திருப்ப யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும் சேர்ந்த மூவர் மாறு வேடத்தில் கொழும்பில் நுழைந்துள்ளதாக அவர் கூறியுள்ளதாகவும் இச் செய்தி கூறுகிறது.

கைவிடப்பட்ட நிலையிலுள்ள வாகனங்கள், பொதிகள் பற்றி அவதானமாக இருக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

காமினி பிறந்தநாள் விழா நட்வர்சிங் பிரதம அதிதி

முன்னாள் அமைச்சரும் ஐ.தே.க அதிருப்தியாளர் குழுவின் முக்கியஸ்தர்களில் ஒருவருமான காமினி திஸநாயக்கா தனது 50 ஆவது பிறந்த தினத்தைக் கடந்த வெள்ளிக்கிழமை நாட்டின் முதலாவது ஐந்து நட்சத்திர ஹோட்டலான ஹோட்டல் ஒபரோயில் கொண்டாடினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு நடைபெற்ற மாபெரும் விருந்துபசாரத்தில் ஆடம்பர உடையணிந்த 900 ராஜதந்திரிகள் பங்குபற்றினர் என்றும் முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் கே. நட்வர்சிங் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

'ஜெ' ஆட்சியில் விற்பனைக்கு வந்துள்ள 'பன்னீர்-திருநீறு'

ஜெயலலிதா ஆட்சியில் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் கள்ளச் சாராய தயாரிப்பு விற்பனை என்பன அதிகரித்து வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன

சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதும் ஆளும் அ. தி எம்.எல். ஏக்கள் தலையிட்டு அதிகாரத் துஷ்பிரயோகம் செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் கள்ளச்சாராய விற்பனை தாராளமாக நடைபெற்று வருவதாகவும் கஞ்சாவை பன்னீர் என்றும் சாராயத்தைத் திருநீறு [என்றும் பரிபாஷையில் கூறி விற்பனை நடைபெறுவதாகவும் தமிழக வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது

தத்து; இதன்பேரிலான பெரும் அநீதி அம்பலமானது

மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான ஹைட்டி தீவில் உள்ள ஆண், பெண், குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்வதாகக் கூறிப் பல குழந்தைகளைக் கூடிய விலைக்கு வாங்கி ஏற்றுமதி செய்து விட்டார்கள் சில தரகர்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது

ஆனால் அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு இந்தக் குழந்தைகளின் உறுப்புகளும் காசுக்குத்தான் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்ற உண்மை அண்மையில்தான் அம்பலமாகியுள்ளது

இதைக் கண்டுபிடித்த ஜெனீவாவில் உள்ள சர்வதேச ஜனநாயக நாடுகளின் வழக்கறிஞர் குழு இந்த அநியாயத்தை ஒழித்துக்கட்ட முனைந்திருக்கிறது அதன் பயனாக அந்நாட்டில் புதிய சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் பிரதான அம்சம் தத்து எடுத்துச் செல்லப்படும் குழந்தைகளுடன் தாயோ, அல்லது தந்தையோ கூடச் சென்று 3 வருடமாவது அங்கேயே இருந்து கண்காணிக்க வேண்டும், இவ்விதம் செய்ய இயலாத பட்சத்தில் தொடர்ந்து ஆறு வருடங்களுக்கு வருடத்திற்கு ஒரு முறையாவது பெற்றோர் குழந்தையைப் பார்க்கக்கூடிய வசதியைத் தத்தெடுப்போர் செய்து கொடுக்க வேண்டும் என்பதாகும். (16)

குருவெனப்போற்றும் எம்.ஜி.ஆரை மறந்து, சந்தியா நினைவாக . . .

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தனது அரசியல் குரு, வழிகாட்டி எனப் புரட்சித் தலைவர் அமரர் எம் ஜி ஆரைப்பற்றி 'புகழ்ந்து', அவரை நினைவுகூர்வது போலக் காட்டிக்கொண்டாலும் கூடத் தனது தாயாரும், மறைந்த நடிகையுமான சந்தியாவின் பெயரிலேயே புதிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார் என அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன

தான் வெற்றி பெற்ற பர்கூர் தொகுதியிலும் சந்தியா பெயரிலேயே அவர் பெரும் திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க, சந்தியா மின்னல் வீரன், படிக்காதமேதை போன்ற படங்களில் முக்கிய பாத்திரங்களில் நடித்தவர் என்பதும், இவரது மரணம் இயற்கையான ஒன்றல்ல, தற்கொலையாக இருக்கலாம் எனப் பெரும் சர்ச்சை ஏற்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கவை.

நாவாந்துறை அணி வெற்றி

கல்வித் திணைக்களத்தினால் யாழ். மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை 7:0 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இப்போட்டிக்கு நடுவராக திரு தயபரன் கடமையாற்றினார்.

(16)

ஒக்சிசன் மூளைக்கலன்களை வாழவைக்கின்றது

ஒக்சிசன் இயக்கப்பாடு குன்றும்போது மூளைக்கலன்கள் 3-4 விநாடிகளுக்கு மேல் உயிர்வாழ்வதில்லை. மனிதன் சுழியாக நீரில் மூழ்கி விபத்து சம்பவிக்கும்போது நரம்பின் உட்புறவாசுகில் குருதி தடைப்படும் போது (துரம்பாசிஸ்) நரம்பின் கிறேக்கன் விழும்போது மூளைக்கலன்களுக்கு ஒக்சிசன் தடைப்படுகின்றது பிணியாளனை மருத்துவ மனைக்கு எடுத்துவரைய முன்பே அவன் ஆவி 'வைகுந்த' யாத்திரையை நடத்தி விடுகிறது. 'ஸ்ட்றோக்' எனும் ஆங்கில வார்த்தையில் குருதி ஓட்டத்தடை அல்லது நரம்பில் வெடிப்பு அர்த்தம் தொனிப்பொருளாகின்றது. அப்பொழுது தான் ஒக்சிசன் தடைப்படுகிறது. இதில் மூளைக்கலன்கள் செத்து விட்டன என்றொரு வியாக்கியானமும் கிடைக்கின்றது.

ஒக்சிசன் மூளைக் கலன்களுக்கு கிடைக்காமல் போனால் அவற்றின் உயிர்வாழ் நிலை 3-4 விநாடிகளுக்கு மேல் நீடிப்பதில்லை என்பதைப் பற்றியும் மூளைக் கலன்களின் உயிர் வாழ் நிலையை நீடிப்பதற்கு மாற்றுச் சிகிச்சை முறை பற்றியும் மேலை நாட்டு விஞ்ஞானிகள் பல வழிகளிலும் ஆய்வு நடத்தி வருகின்றனர்.

வீரென் போர்ட் நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் ஜெரிகிடின் போர்க தன் ஆய்வின் பிரதிபலனை சொல்கிறார்- உண்மையிலேயே அவர் தன் ஆய்வில் புதிதாக எதையும் சொல்லிவிடவில்லை. இன்றைய நவீன யுகத்தில் இரு மனை சமனம் பண்ண உபயோகிக்கும் ''டெக்ஸ்ரோ மெத போன்'' மருந்தைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

ஆண்டாண்டுகளாக விஞ்ஞானிகள் ''ஒக்சிசன் தடை மூளைக் கலன்களை நெரிசலடைய வைத்து மரணத்தை ஏற்படுத்தி வைக்கின்றது'' என்றே நம்பி வந்தனர்.

ஆனால 1970 இல வோஷிங்டன் 'சென்லூயி பல்கலைக் கழக'' நரம்பியல மருத்துவ நிபுணர் ஜோன் பிலனேயின் 'எச்.ஈ.ஐ-ரொரொச்சி சிற்றி' கோட்பாட்டின் பிரகாரம் ஒக்சிசன் கிடைக்காத மூளைக்கலன்கள், நரம்புகள் நெரிசலடைந்து சுறுசுறுப்படைய வைக்கும் 'குளூடமேட்' எனும் இரசாயன திரவத்தை வெளியேற்றுகின்றன.

இக்குளூடமேட் கலன்களில தங்கிதமாகும் மென்மையான திறந்ததுவாரங்களில பரிணாமம் பெற்று இணைவதால மூளைக்கலன்கள் வாழ்வதற்குத் துணையாகும், மூல திரவியங்களை அதிகமதிகம் உறுஞ்சி உள் வாங்கிக் கொள்கின்றன.

இவ்வியக்கப்பாட்டில நஞ்சுத்தன்மை கிடைக்கின்றது. இதை நிறுத்த வேண்டுமல்லவா! இக்கலன்கள் அதிகமதிகம் நீரை உறுஞ்சியெடுத்துக் கொள்கின்றன. இதன் விளைவாக கலன்கள் வீக்கமடைந்து வெடிப்புக்குள்ளாகின்றன.

1975 இல டென் போர்ட் நரம்பியல நிபுணர் டெனிஸ வோய் நரம்புக் கலன்களை இரசாயனப் பரிசோதனைக்குட்படுத்தி குளூடமேட் திரவத்தைச் சுண்டியளவு சேர்க்கும் பொழுது அக்கலன்கள் அதிக நீர் உறுஞ்சலால வீக்கமடைந்து செத்துமடிவதைக் கண்டார். மீண்டும் குளூடமேட் திரவத்தை கழுவியகற்றினார், கலன்கள் இரு மணி நேரங்களின் பின்னர் ஒன்றோடு ஒன்று மோதி இறப்பதையும் கண்டார். அவர் ஆய்வின் முடிவு இதுவே.

இப் பரிசோதனையில கல்சியம் ஓர் உசாத்துணையாக இயக்கமடைகிறது. மூளைக்கலன்களுக்கு ஒக்சிசன் தடைப்படும்போது நொதியங்களின் செயற்பாட்டினால கல்சியம் உசாத்துணையாக இயங்குகின்றது. எனவே குளூடமேட் அதிக மதிகம் மீட்சி பெறுவதைக் காணலாம். இவ்வாறு மீட்சி பெறும் குளூடமேட் அக் கலன்களுக்குக் காணும் பரிமாற்றத்தை 3 வீதமாக அழித்து விடுகின்றது

க. பொ. த. (உ. த.)
விசேட பரீட்சை - 1991

க.பொ.த. (உ/த) விசேட பரீட்சை (1991) திட்டமிட்டபடி 1992 சித்திரை 01 ஆம் திகதி ஆரம்பமாகும். பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள், அதிபர்கள் அவற்றை உடன் பெறுவதற்கு இலகுவாக அவ்வக் கோட்டக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் முகவரிக்குத் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன. இடம் பெயர்ந்துள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட கோட்டக்கல்வி அலுவலகங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. சகல பரீட்சார்த்திகளும் உரிய இடங்களிலிருந்து உடனடியாக அவற்றைப் பெற்றுப் பரீட்சைக்குத் தயாராகும்வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்டவாறு கல்வித் திணைக்களம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

புனித ஹென்றியரசர் கல்லூரியும் இளவாலை கன்னியர் மடமும் இணைந்து நடாத்திய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி புதிய ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அருட் திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரும் அருட் சகோதரி பொனவெஞ்சரும் தலைமை தாங்கினார்கள்.

பிரதம விருந்தினராகப் பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேலு கலந்து கொண்டார்.

இடைவேளையின் போது, பான்ட் வாத்திய இசையுடன் கூடிய இல்ல மாணவ மாணவிகளின் அணிநடை சிறப்பாக இடம் பெற்றது.

வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு திருமதி சற்குணம் மகேசவேலு பரிசில்களை வழங்கினார். (16)

துரிதம்

யாழ். மாவட்ட விலை மதிப்பீட்டுத் திணைக்களம் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களின் வரி மதிப்பீட்டுவேலைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

பல்வேறு சிரமமான சூழ்நிலையிலும் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் யாழ். மாநகர வரி மதிப்பீட்டு வேலையின் 75 வீதத்தைப் பூர்த்தி செய்துள்ளது. (14)

★ மணலாறு ★ சிலாவத்துறை ★ ஆணையிறவு

சொந்தமண் காக்க ஒருமித்து திரண்டெழுவோம் - யோகி அறைகூவல்

'எமது மண்ணில் பட்டினியின்றி நாம் வாழ வேண்டுமானால் எமது சொந்தக் கால்களிலேயே நாம் நிற்க வேண்டும். உள்ளூர் உற்பத்தியில் ஊக்குவிப்பு மிகமிக அவசியமானதாகும்'

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி நாவற்குழியில் நடைபெற்ற சிலாவத்துறையில் வீரச்சாவடைந்த வீரவேங்கைகளின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

'சிலாவத்துறை கடற்கரையை அண்டிய பகுதியில் அமைந்துள்ளது. இதனாலேயே சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ள எதிரி முனைப்பாக உள்ளான். இதனை எம் ஒருமித்த பலம் கொண்டு தடுத்து நிறுத்த வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தினார்.

'எம் மண்ணில் அநேகமாக எல்லாவகை உணவு பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் அதனை விருத்தி பண்ணப் பயிர்களை உற்பத்தி செய்துவிட்டுக் கொழும்புக்கு அனுப்பமுடியவில்லையே என நாட்டுமுற்றுக் கவலைப்படுவதில் பொருளில்லை' எனவும் அவர் எடுத்துரைத்தார்.

'சிலாவத்துறை, ஆணையிறவு, மணலாறு ஆகியவையாவும் எமது சொந்த மண். இவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டியது என்பதுணர்ந்து தியாகம் புரிந்து நாமனைவரும் செயற்பட வேண்டும்' என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

திரு. எழிலரசன், மகளிர் முன்னணியைச் சேர்ந்த தமிழரசி மற்றும் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் அரசண்ணா, கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் பரா, தமிழ் மாறன், தேவர் அண்ணா முதலானோரும் பேசினர்.

● மலையகத் தொழிலாளர்களுக்கு வீடு

பௌத்த உயர்பீடங்கள் எதிர்ப்பதற்குக் கண்டனம்

இலங்கை அந்நியர் ஆட்சியில் இருந்தபோது தோட்டத் தொழிலாளர்கள் இங்கு அழைத்துவரப்பட்டனர் என்பதினைக் காரணம் காட்டி அவர்களுக்குக் குடியிருக்க வீடு வழங்கக் கூடாதென பௌத்த உயர்பீடங்கள் எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைதேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளர் ராஜா செனவிரத்ன பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையில பௌத்த உயர்பீடங்களின் இந்நிலைப்பாட்டைவன்மையாகக் கண்டித்தார்.

''இந்தியத் தொழிலாளர்கள் நாட்டை அபிவிருத்தி செய்யவே இங்கு அழைத்து வரப்பட்டனர் அவர்கள் அடிமையாக, அடிமை சாசனம் எழுதிக்கொண்டு வரப்படவில்லை.

சாவதேசச் சாசனப்படி ஒருநாட்டில தொடர்ந்து 5வருடங்களாக வசித்து வந்தால அவருக்கு அந்நாட்டின் குடியுரிமை வழங்க வேண்டும். அந்நாட்டு மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளும் சலுகைகளும் அவர்களுக்கும் கிடைக்கும் பல நூற்றாண்டுகளாக இந்நாட்டிற்காகத் தமது உயிர்களையே அர்ப்பணித்து அந்நிய வருமானத்தைத் தேடித்தந்து கொண்டிருப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்

இவர்களைத் தொடர்ந்தும் அடிமைகளாகவும் ஒதுக்கி வைக்கப்படவேண்டியவர்களாகவும் சுட்டிக்காட்டுவது பௌத்த மதத்துக்கு இழுக்கானது. நேர்மாறானது.

''புனித தர்மத்தைப் போதிக்கும் உயர்பீடாதிபதிகள் பிரித்துப் பேசுவதும் மனிதாபிமான உரிமைகள் வழங்கப்படுவதை எதிர்ப்பதும் புத்தபகவானின் பஞ்சசீலக் கோட்பாடுகளுக்கு எதிரான செயலாகும்''

மேற்கண்டவாறு அவர் சொன்னார்

பயிற்சி நெறி

கோப்பாயில் இலவச தமிழ் சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் ஆதரவுடன் வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் இப் பயிற்சி நெறியை ஆரம்பித்துள்ளது.

ஆறு மாத காலம் இப் பயிற்சி நெறி நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும். (10)

வியட்னாமிய மந்திரி விஜயம்

வியட்னாமிய வெளியுறவு மந்திரி சோலின் ஐந்து நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இந்தியா வந்துள்ளார்.

காங்கிரஸ் கண்டனம்

கடந்த சில தினங்களாக அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இடம்பெற்று வரும் சம்பவங்களை ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ கண்டித்துள்ளது.

இரு இனங்களுக்கு மிடையேயான உறவை இது மேலும் பாதிக்குமென இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கு

யாழ், மாவட்ட சனசமூக நிலையங்களுக்கான கருத்தரங்கு இன்று யாழ். உள்ளூராட்சித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

யாழ், மாவட்ட சம்மேளனம், பிரதேச சபைகள், உப அலுவலகப் பகுதிச் சமாசங்களின் தலைவர்கள், செயலாளர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ளனர். 14

★ கிராம சேவகர்களின்

சான்றிதழ் மூலப்பிரதிகள் ஒப்படைக்கப் பணிப்பு

இளைப்பாறிய கிராம சேவை அலுவலரின் கல்விச் சான்றிதழ்கள் ஆவணங்களின் மூல பிரதிகளைத் திருப்பி உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு யாழ் செயலகத்தைப் பணித்துள்ளது.

1961 ஆம் ஆண்டு கிராம சேவையாளர்கள் தெரிவு செய்யப்படும் போது நேர் முகப்பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள் யாழ். செயலகத்தினால் வழங்கப்படாதிருந்து வந்தது.

இது பற்றி யாழ், மாவட்ட ஓய்வூதியர் சங்கம், அமைச்சுச் செயலாளரிடம் சுட்டிக் காட்டியிருந்தது.

இதனையடுத்து இச்சான்றிதழ்களின் மூலப்பிரதியைப் போட்டோகிரதி எடுத்து வைத்துக் கொண்டு மூலப்பிரதிகளை மீளளிக்கலாம் என்று அனுமதிவழங்கப்பட்டுள்ளது. (14)

கண்டசாலாவுக்கு சிலை நிறுவுகிறார் எஸ்.பி.பி.

தன் குருவான அமரர் கண்டசாலாவுக்கு பிரபல தென்னிந்தியப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஹைதராபாத்தில் சிலை ஒன்றை நிறுவ உள்ளார்.

சிலை திறப்பு விழா எஸ்.பி. பால சுப்பிரமணியத்தின் பிறந்த நாளன்று நடைபெறவுள்ளது.

அன்றிரவு அவர் சுமார் 50 பாடகர்களுடன் கீதாஞ்சலி செலுத்தவுள்ளார்.

கோரிக்கை

அணு ஆயுதங்களை தடை செய்து முற்றாக அழித்து விட வேண்டும் என்று சீனாவும் நேபாளமும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன

அமெரிக்காவில் திருடர்கள் 'சாதனை'

அமெரிக்காவில் ஒவ்வொரு 60 விநாடிக்கும் ஒரு திருட்டு என்ற விகிதத்தில் நடைபெற்று வருகின்றது இத்திருட்டுச்சம்பவம் 90 விநாடிகள் வரை நீடிக்கின்றது திருடர்கள் பெரும்பாலும் விற்பனை நிலையத்தின் நிர்வாகிகளை அல்லது எழுதுவினைஞர்களைத் தாக்கியும் 58 வீதத்தில் அவர்களைக் கொலை செய்தும் வருகின்றனர் என அண்மையில் வியாபார நிறுவன இதழ்கள் வெளியிட்ட அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தெரிவுக்குழுவின் வாய்மூல சாட்சியம் இன்றுடன் நிறைவு!

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக்குழு இன்றுடன் தனது வாயமூலச் சாட்சியப் பதிவுகளை முடித்துக் கொள்ளவுள்ளது.

தென்மாகாண முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி, பொது [illegible] எம். பி. [illegible] ஆகிய இருவரும் இன்று தனித்தனியாகத் தெரிவுக் குழு முன் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இதனையடுத்து மூன்று வாரங்களுக்குள் தெரிவுக்குழு தனது அறிக்கையைத் தயாரிக்குமென்று குழுவில் அங்கத்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கச்சதீவு விவகாரம்; மீண்டும் ராஜ்ய சபையில் எழுந்தது!

இலங்கைக் கடற்படையினரிடமிருந்து இந்திய மீனவர்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும் கச்சதீவில் மீன்பிடிப்பதற்கான உரிமையை மீட்டெடுக்க வேண்டும் என ராஜ்ய சபையில் உள்ள தமிழக எம். பி. க்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவ்விவகாரத்தை அ.தி.மு.க. உறுப்பினரான மாதவன் எழுப்பினார். அவர் இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவங்கள் பற்றிச் சபையில் பேசினார்.

1974 இந்திய— இலங்கை உடன்படிக்கை கச்சதீவை இலங்கைக்கு வழங்கினாலும் அதேவேளை இந்திய மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையைப் பாதுகாக்கிறது என அவர் குறிப்பிட்டார்.

ஆனால் 1976 இல் செய்து கொள்ளப்பட்ட மற்றொரு ஒப்பந்தம் முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு எதிர்மாறானதாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

அன்றுதொட்டு இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டு வருகின்றனர் எனக் குற்றஞ்சுமத்திய அவர் இதனைத் தடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்திய மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமைகளை மீட்டுக் கொள்ள வேண்டும் எனவும் கோரினார்.

இவரினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை தி.மு.க. உறுப்பினர்களான முரசொலி மாறனும், வி. கோபாலசாமியும் மற்றும் அ.தி.மு.க. உறுப்பினரான நாஞ்சில் எம். [illegible] ஆதரித்தனர்.

சபையில் பிரசன்னமாயிருந்த வர்த்தக இணையமைச்சர் பி. சிதம்பரம் அரசிடம் இவர்களின் உணர்வுகளை எடுத்துச் சொல்வதாக வாக்குறுதி அளித்தார்.

88 ஆவது கிரிக்கெட் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

நேற்று முன்தினம் இடம்பெற்ற 88 ஆவது சென்றல், சென்ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் பின்வருவோர் பரிசில்களைப் பெற்றனர்.

சிறந்த பந்துவீச்சாளர்- லட்சுமிகரன் மத்திய கல்லூரி- சிறந்த களத்தடுப்பாட்டக்காரன் சு. ரகுநாதன் மத்திய கல்லூரி, சகல துறையிலும் சிறந்த வீரன் எம். கண்டீபன், சென்ஜோன்ஸ் கல்லூரி, (மான் ஒவ் த மாச்) போட்டியில் சிறந்த வீரன் லக்ஷ்மிகரன் மத்திய கல்லூரி: (16)

● கடவுச் சீட்டு மோசடி

ஸ்ரீலங்காப் பொலிசார் உதவியை கனடா நாடுகின்றது

கனடாவுக்குத் தமிழ் அகதிகளைக் கடத்திச் செல்லும் குழுவினரின் போலிக்கடவுச் சீட்டு விண்ணப்ப மோசடிகள் பற்றி கனேடியப் பொலிசார் ஸ்ரீலங்காப் பொலிசாரிடம் தகவல்கள் கோரியுள்ளதாக நேற்றுக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த வாரம் இம்மோசடியில் சம்பந்தப்பட்டிருந்த இருதமிழ் வாலிபர்களைக் கனேடியப் பொலிசார் கைது செய்திருந்தனர் என்றும் 6 மாதங்களுக்கு முன்னரேயே இம்மோசடிகள் பற்றிக் கனேடியப் பொலிசாருக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது

★ மே 3 முதல் இரத்மலானை

இந்துக்கல்லூரி பழைய இடத்திலேயே இயங்கும்

இரத்மலானை இந்துக் கல்லூரி மே மாதம் மூன்றாம் திகதி முதல் மீண்டும் பழைய இடத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் தவணை ஆரம்பத்துடன் அதன் பழைய இடத்தில் இயங்க வைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சு வட்டாரங்கள் கூறின.

தற்போது இக்கல்லூரி தெஹிவளையில் செயற்படுகிறது.

பரிசளிப்பு

வடமராட்சியில் பல [illegible] போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. (10)

வறட்சியிலும் அற்புதம் தரையிலிருந்து பாயும்நீர்

வெள்ளவாய - மாத்தறை மார்க்கத்தில் 38 ஆவது மைலில் தரையிலிருந்து தண்ணீர் பீறிட்டுப் பாயும் அதிசயம் நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. பூங்காக்களில் செயற்கையாக மேலே பாய்ச்சப்படும் அலங்கார நீரூற்று போன்று இது காணப்படுவதாகவும் பெரும் தொகையான மக்கள் இதனை அதிசயத்துடன் கண்டுகளிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. மலையகத்தில் தற்போது கடும் வறட்சி நிலவுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது

விவரம் கோருகிறார்

வேலணை கோட்டப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்தபின் இதுவரை பாடசாலை அதிபர்களினால் லீவு அனுமதிக்காமல் தொடர்ந்து பாடசாலைக்கு சமுகமளிக்காமல் உள்ள ஆசிரியர்களின் விபரங்களைத் தமக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறு வேலணை கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புவனேந்திரன் தமது கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார். (15)

புதிய பொறுப்பு

யாழ் கல்வித் திணைக்கள ஆங்கிலக் கல்வி ஆலோசகராகப் பணியாற்றிய திரு. டி. ஆர். அருமைநாயகம் யாழ். மாவட்ட ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்த்தப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார். (11

மருந்துத் தட்டுப்பாடு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு மீண்டும் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் நோயாளர்கள் பெரிதும் அவதியுற வேண்டியுள்ளது.

அவசர நோயாளர்களுக்குத் தேவையான தொற்றுநீக்கி மருந்து வகைகளுக்கும், நோயாளர்களுக்கு ஏற்றப்படும் குளுக்கோஸ் போன்றவற்றிற்கும், மலேரிய நோயைத் தடுப்பதற்குரிய மருந்துவகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (10)

சைக்கிள் திருட்டு

வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த புதிய சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணம் சிவப்பிரகாசம் வீதியில் நிகழ்ந்துள்ளது.

மகேஸ்வரன் என்பவரின் சைக்கிளே திருடப்பட்டுள்ளது.

இந்தத் திருட்டை மதில் மேலால் உட்புகுந்தவர்கள் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோபல் பரிசு; சுவீடன் நாட்டு அறிவியலறிஞரே அதன் வித்து

நோபல் பரிசு என்பது சர்வதேச மதிப்புப் பெற்றது. அடக்கியொடுக்கப்படும் மக்களுக்காக வெஞ்சினம் கொண்டு பாயும் புலியாக மாறி வைரிகளின் கொட்டமடக்கும் ஆற்றல் வாய்ந்த பர்மிய எதிர்க்கட்சித் தலைவியான அங்சான் சூகிக்குக் கூட இப் பரிசு கிடைத்துள்ளது. நோபல் பரிசின் வரலாற்றை இக் கட்டுரை துல்லியமாக வெளிப்படுத்துகின்றது.

உலகில் சாதனை செய்தவர்களுக்கு பல்வேறு நாடுகளில் பல்வேறுவிதமான பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் நோர்வே நாட்டில் இருந்து வழங்கப்படும் ''நோபல் பரிசு'' உலக அரங்கில் மிகச்சிறந்த பெருமைமிக்க பரிசாகக் கருதப்படுகின்றது.

சுவீடன் நாட்டைச் சேர்ந்த அல்பிரட் நோபல் என்ற அறிவியலறிஞரே இப் பரிசைத் தோற்றுவித்தவராவார்.

இவர் ''டைனமைட்'' என்ற வெடிமருந்தைக் கண்டுபிடித்ததன் மூலம் கோடீஸ்வரரானவர்.

திடீரென ஒருநாள் நோபல் இறந்துவிட்டார் என இரங்கல் அறிவிப்பு இதழ் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருந்தது. அதை நோபல் படிக்க நேர்ந்தது. அந்த அறிவிப்பில் அவரை ''எமதூதன்'' என்று பொருள்படும்படி விவரித்திருந்தார்கள். வெடி மருந்தைக் கண்டுபிடித்ததால் தனக்கு இப்படி ஒரு நிலை வந்துவிட்டது என எண்ணி நோபல் வேதனைப்பட்டார் தனக்கேற்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்கு. சமுதாய முன்னேற்றத்திற்கு தான் ஏதாவது செய்யவும் நோபல் விரும்பினார்.

அதன் வெளிப்பாடே இந்த நோபல் பரிசு. நோபல் தன்னுடைய சொத்துக்களில் இருந்து வரும் வருவாயை தலைசிறந்த அறிஞர்களுக்கு அளிக்கும்படி தனது உயிலில் குறிப்பிட்டிருந்தார்.

1901ஆம் ஆண்டில் இருந்து சமாதானம், இலக்கியம் இரசாயனம், பௌதிகம், மருத்துவம் ஆகிய ஐந்து துறைகளில் சாதனை செய்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால் 1969ஆம் ஆண்டில் இருந்தே பொருளாதாரத்தில் சாதனை புரிந்தவர்களுக்கும் இப் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பரிசு ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வழங்கப்படுகிறது. ஏனெனில் 1896ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி தான் நோபல் இறந்தார்.

1901 ஆம் ஆண்டில் முதன் முதலாக நோபல் பரிசு வழங்கப்பட்ட போது முதலாவது சமாதான நோபல் பரிசை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஜீன் எச். டுனான்ட்டும் பிரான்ஸைச் சேர்ந்த பிரெட்ரிக் பாஸியும் பெற்றுக் கொண்டனர்.

பௌதிகவியலுக்கான முதலாவது நோபல் பரிசை ஜெர்மனியைச் சேர்ந்த டபிள்யூ. ரொண்ட்ஜனும், இரசாயனவியலுக்கான பரிசினை ஒல்லாந்தைச் சேர்ந்த ஜே. எச். வான்ட் ஹொப்பும், மருத்துவத்திற்கான பரிசை ஜேர்மனியைச் சேர்ந்த இ. ஏ. வோன் பேஹ்ரிங்கும், இலக்கியத்திற்கான பரிசை பிரான்ஸைச் சேர்ந்த ரெனி எவ். ஏ. சல்லி புறுதோமும் பெற்றுக் கொண்டனர்.

நோபல் பரிசுக்குரிய சாதனையாளர்களைத் தேர்ந்தெடுப்பது ஒரே அமைப்பு அல்ல. சமாதானத்திற்கான நோபல் பரிசுக்குரியவர்களை நோர்வே நாட்டு பாராளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் ஐவரைக் கொண்ட குழுவும் பௌதீகம், இரசாயனவியல் பொருளாதாரம் ஆகியவற்றுக்குரியவர்களை சுவீடிஷ் சயன்ஸ் அகடமியும், மருத்துவத்திற்கான பரிசுக்குரியவர்களை [illegible] ஹோமிலுள்ள கரலைன் இன்ஸ்ரிரியூட்டும், இலக்கியத்துக்கான பரிசுக்குரியவர்களை சுவீடிஷ் அக்கடமி லெட்டர்ஸும் தீர்மானிக்கின்றது

நோபல் பரிசு ஆரம்பிக்கப்பட்ட 1901ஆம் ஆண்டு முதல் இன்றுவரை அமெரிக்கா 192 நோபல் பரிசுகளையும் பிரிட்டன் 88 நோபல் பரிசுகளையும் பெற்றிருக்கின்றன இலக்கியத் துறையில் அதிக பரிசுகளைப் பெற்ற நாடு என்ற பெருமையை பிரான்ஸ் பெற்றுக்கொள்கிறது

இது இவ்வாறிருக்க 1991 ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசை ஏழு பேர் பெற்றிருக்கின்றார்கள்.

பௌதிகத்துறைக்கான நோபல் பரிசை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பியர் கில்லெஸ்டி ஜெனிஸ் (59) பெற்றிருக்கிறார். இவர் மிகச் சிறந்த விஞ்ஞானியவார் நவீன கால ஐசாக் நியூட்டன் என இவர் வர்ணிக்கப்படுகின்றார்.

இரசாயனவியல் நோபல் பரிசை சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் ரிச்சார்ட் எர்ன்ஸ்ட் (58) பெற்றுக்கொண்டார். இவருக்கு கொலம்பியா பல்கலைக்கழகத்தில் [illegible] இரசாயனத்தில் [illegible] ஆராய்ச்சியை மேற்கொண்டதற்காக 'ஹொர்விட்ஸ்'' விருதும் அண்மையில் வழங்கப்பட்டிருக்கிறது.

பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசை அமெரிக்கப் பேராசிரியரான ரொனால்ட் கோஸ (80) பெற்றுக்கொண்டார் பிரிட்டனில் பிறந்த இவர் தற்போது அமெரிக்காவில் வசித்து வருகின்றா

கடந்த வருடம் (1991 நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய சிக்காகோ பல்கலைக்கழகத்தில் இவர் பேராசிரியராக இருக்கிறார். இப் பல்கலைக்கழகத்திலேயே நோபல் பரிசு பெற்ற எட்டு பேராசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

சிக்காகோ பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய 62 பேர் இதுவரை நோபல் பரிசைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு இம் முறை இருவருக்கு கிடைத்திருக்கிறது ஜேர்மனியைச் சேர்ந்த எர்வின் நெஹெர், பேர்ட் சக்மன் ஆகியோரே அந்த இருவருமாவர்

இலக்கியத்திற்கான 1991 ஆம் ஆண்டுக்குரிய நோபல் பரிசை தென்னாபிரிக்க இன ஒதுக்கல் எதிர்ப்பு எழுத்தாளரான நடைன் கோர்டிமர் (67) என்ற பெண் எழுத்தாளர் பெற்றிருக்கின்றார். தென்னாபிரிக்காவுக்கு கிடைத்த முதலாவது நோபல் பரிசு இதுவாகும்.

சமாதான நோபல் பரிசை பர்மிய எதிர்க்கட்சித் தலைவியான அங்சான் சூகி (46) பெற்றுள்ளார். சமாதானப் பரிசு பெறும் எட்டாவது பெண்மணி ஆவார் இவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பி ஏ பட்டம் பெற்றவர்.

1962 ஆம் ஆண்டு முதல் பர்மாவில் இராணுவ ஆட்சியே நடைபெற்று வருகின்றது.

● லிபியாவில் வசிக்கும்

கனேடிய மக்கள் வெளியேறுமாறு கனடா கோரிக்கை

லிபியாவிற்கு எதிராக எந்த விதமான தடைகளையும் எடுக்க வேண்டாம் என அரபு லீக் தலைவர் கேட்டுள்ளார்.

அரபு லீக்கின் அவசர மாநாட்டின் முடிவில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே லிபியாவில் உள்ள கனேடிய மக்களை வெளியேறுமாறு கனடா கேட்டுக் கொண்டுள்ளது.

லிபியாவிற்கு எதிராக தடையைக் கொண்டு வர ஐ. நா திட்டமிட்டிருப்பதால் அதில் கனடா மக்கள் சிக்கி விடக் கூடாது என்பதற்கே கனடா இந்த அறிவிப்பை தனது மக்களுக்கு விடுத்துள்ளது.

ஏற்கனவே தமது மக்களை லிபியாவிலிருந்து வெளியேறுமாறு பிரிட்டன், அமெரிக்கா பிரான்ஸ் அரசுகள் கோரியுள்ளது, தெரிந்ததே.

ஸ்ரீபெரம்புதூரில் வர்மா விசாரணை நடத்தினார்

ராஜீவ்காந்தி கொலை விசாரணையில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த குறைகளை விசாரித்து வரும் வர்மா கமிஷன் தனிநீதிபதி வர்மா நேற்று ஸ்ரீபெரம்புதூர் மைதானத்திற்கு சென்று அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டார்.

முன்னதாக இவர் ராஜீவ் செய்தியாளர் மாநாடு நடத்திய சென்னை விமான நிலையம், இரவு ராஜீவ் தங்க இருந்த விடுதி ஆகியவற்றுக்கும் சென்று விசாரணைகளை மேற் கொண்டார்.

★ பலவித குற்றச்சாட்டின் பேரில்

27 படையினர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்

முப்படைகளையும் சேர்ந்தவர்களில் 27 பேர் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொலை, களவு, லஞ்சம், பலாத்காரம் போன்றவற்றில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதாக சிங்கள தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

★ முல்லைத்தீவு மாவட்டத்தில்

ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டக் கல்விப்பணிப்பாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்

இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்களும் ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய தகைமையுள்ள இளைப்பாறிய அரச ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்

இந்தநியமனத்துக்கானநேர் முகப்பரீட்சைகள் முடிவுற்று தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல் மாகாண அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகத்தெரிய வருகிறது

இவர்களுக்கு அடுத்தமாதம் கருத்தரங்கு ஒன்று நடைபெறும் எனவும் அதற்கான ஒழுங்குகளைக் கல்விப்பணிப்பாளர் திரு வே. சுப்பிரமணியம் மேற்கொண்டுள்ளார் என கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன 52

வீரச்சாவு

மணலாற்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் அறத்திரவன் (சி. கணபதிப்பிள்ளை அம்பாறை) வீரச்சாவு அடைந்தார்

மணலாற்றில் காயமடைந்திருந்த கப்டன் பரஞ்சோதி (சி. அருள்சீலன் திருமலை) நேற்று வீரச்சாவு எய்தினார் எனத் தெரிவிக்கப்படுகிறது

மரண அறிவித்தல்

அருட்சகோதரி

மொறீஸ் மனுவல்பிள்ளை

(திருக்குடும்பச்சகோதரி)

அருட்சகோதரி மொறீஸ மனுவல்பிள்ளை 22-03-92 பி. ப 9.30 மணிக்கு காலமாகிவிட்டார் இவர் அருட்சகோதரி மேரி தியடோசியா மனுவல் பிள்ளை அவர்களின் சகோதரியும் திரு அ. யோ. வ. சேவியர் அவர்களின் சிறியதாயாரும், திருமதி ஆர். ஜே. பி. சேவியர் (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் 23-03-92 மாலை 4 மணிக்கு மரணச்சடங்கு நடைபெற்று பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

இதை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

தகவல்:
32/28 அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,
அ. யோ. வ. சேவியர்
(பெறாமகன்)

03050

★ மன்னார் திரும்பிய

அகதிகள்சொந்தஇடம்திரும்ப இராணுவம் அனுமதி மறுப்பு

தமிழ்நாட்டிலிருந்து அண்மையில் திரும்பிய மன்னார்த்தீவான பேசாலை, சனிவிலேச் ஆகிய அகதி முகாம்களில் பெரும் சிரமங்களிற்கு மத்தியில தங்கியிருக்கும் மக்களை மன்னார் மாவட்டத்தில் பிற இடங்களுக்குச் செல்லக்கூடாதென கண்டிப்பான உத்தரவையிட்டுள்ளனர்.

நானாட்டன், விடத்தல்தீவு மாந்தை, முருங்கன் பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் இப்பகுதிகளுக்குச் செல்ல முடியாத இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

அகதிமுகாம்களில் தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ள இந்த அகதிகள் தாங்களாகவே ஓலைக்கொட்டில்களை அமைத்து தங்கியிருப்பதாகவும் பல நெருக்கடிக்கு மத்தியில் வாழ்வதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது,

இம்மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்குமாறு இராணுவத்தினரிடம் கேட்கப்பட்டபோது படையினர் அனுமதி மறுத்ததாகவும் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது- 07

கிளிநொச்சி ஊரடங்கு நீக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் முதல் நீக்கப்பட்டுள்ளது,

எனினும் முல்லைத்தீவு, நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் ஊரடங்கு தொடர்ந்து அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலநறுவை...

- ரீ-81 மகஸீன் - 08
- ஐ, எம் ரவைகள் - 990
- ஏ. கே கோச்சர் - 07
- கெல்மட் - 04
- சப்பாத்து - ஆறு சோடி

என்பன

இம் மோதலில் மேஜர் ஈஸ்வரன் (கந்தசாமி - லிங்கேஸ்வரன், சந்திரவெளி) வீரவேங்கை அலன் (கணபதிப்பிள்ளை - இராமச்சந்திரன், மொறக்கொட்டாஞ்சேனை), வீரவேங்கை இராமமூர்த்தி)செல்லத்தம்பி பரமேஸ்வரன் மாங்கேணி) இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். 08

இங்கிலாந்திற்கு..

கட்சின் 46, றொட்னி றோச் 43 என்ற பெறுபேற்றைக்கொடுத்த ஓட்டங்களுடன் 43.5 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 232 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மழையின் நிமித்தம் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

மீண்டும் ஆட்டம் ஆரம்பமான பொழுது ஒரு பந்து மாத்திரம் வீசப்பட்டதும் ஆட்டம் நிறுத்தப்பட்டு இங்கிலாந்து அணி வெற்றி பெற்றதாக போட்டிக்குழுவினரால் அறிவிக்கப்பட்டது- ஆனால் இந்த முடிவை தென்னாபிரிக்க அணி மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை என்று அவுஸ்ரேலியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகக்கோப்பை விதிகளின்படி ஒரு பந்து வீச்சில் 22 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என தென்னாபிரிக்காவிற்கு அறிவிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

25-ம் திகதி நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணி பாகிஸ்தான் அணியை எதிர்த்து ஆடும்.

இப்போட்டித் தொடரில் சிறந்த வீரராக நியூசிலாந்து அணி வீரர் மார்ட்டின் குறோ தெரிவு செய்யப்பட்டுள்ளார், இவருக்குப் பரிசாக 20 இலட்சம் ரூபா பெறுமதியான காரும் 10 இலட்சம் ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படவுள்ளன (16)

வானில் வந்த 7 தமிழர்கள் நிலாவெளியில் சுட்டுக்கொலை

நிலாவெளியில் கடந்த வாரம் வான் ஒன்றில் வந்த 7 தமிழ் மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பி, பி, ஸி, தெரிவித்தது,

பி, பி, ஸி. செய்தியாளர் திருமலை சென்றிருந்தபோது இத்தகவலை அவ்வூர் வாசிகள் தெரிவித்திருந்தனராம்

இதே வேளை சிங்கள வியாபாரி ஒருவர் கருத்து வெளியிட்ட போது திருமலையில் அடுத்தது என்ன நிகழும் என்ற அச்ச உணர்வு நிலவுவதாக தெரிவித்தாராம்,

கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் காயம்

மிருகவேட்டைக்கு சொந்த முயற்சியில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கு தற்செயலாக வெடித்ததனால் வலது கை மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ் வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டுள்ளார்,

வவுனியா கல்மடு ஆசிகுளத்தைச் சேர்ந்த வேலும்பிள்ளை வைரமுத்து 53 வயது என்பவரே காயப்பட்டவராவார். 07

பள்ளேகல முகாமில் கைதிகளுக்கு பனடோல் மட்டுமே

பள்ளேகல திறந்தவெளி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிங்கள கைதிகளுக்கு கடும்நோய் அல்லது காயங்கள் ஏற்பட்டால் சிகிச்சையளிக்க படையினர் மறுத்து வருவதாகவும் பனடோல் பஞ்சு, பிளாஸ்ரர் போன்றவையே வழங்கப்படுகிறது எனவும் தெரிய வந்துள்ளது.

இம் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் பி பி ஸிக்கு எழுதிய கடிதத்தில் இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது

உறவினர்களால் தமக்கு கொண்டுவரப்படும் பணத்தை கூட கிடைக்கவிடாது படையினர் தடுப்பதாகவும் அக்கைதி குறிப்பிட்டுள்ளார்

வழக்குச் சான்றுப் பொருள்களை திருடிய நீதிமன்ற ஊழியர்கள்

நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாகச் சமர்ப்பிக்கப்பட்டு மன்ற வளவிலும் களஞ்சிய அறையிலும் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் நீதிமன்றத்தில் கடமையாற்றுபவர்களாலேயே திருடப்பட்டது பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

பாணந்துறை பொலிஸ் நீதிமன்றத்தில் இருந்தமேற்படி பொருட்கள் திருடப்பட்டது சம்பந்தமாக அங்கு கடமையாற்றும் லிகிதரையும் காவலாளியையும் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது திருடியதை ஒப்புக் கொண்டனர்

நீதிமன்ற வளவில் இருந்த வாகனங்களின் டயர்களையும் இவர்கள் கழற்றி விற்றுள்ளதாகவும் அவற்றின் பெறுமதி ரூபா 30,000 எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு ஊழியர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

டாங்கி..

படையினர் ஆயுதமும் பறிமுதல்

இதைத்தவிர படையினரின் டாங்கி எதிர்ப்பு ஆயுதம் (106 எம் எம் RCL) ஒன்றையும் புலிகள் மணலாற்றில் கைப்பற்றியுள்ளதையும் அப்பத்திரிகை சுட்டிக்காட்டுகிறது.

ஆபத்தானவை

புலிகள் இதுவரை டாங்கிகளை அழிக்க கண்ணிவெடிகளை பயன்படுத்தினாலும் இந்த டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் கண்ணிவெடிகளைவிட ஆபத்தானவை என இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

புதிய பிரிவு இணைப்பு

புலிகள் அமைப்பு கரும்புலி எனத் தற்கொலைப்படையையும் சுதந்திரப்பறவை என்ற பெண்கள் படையும் கடற்புலி என்ற கடலில் போராடும் படையையும் அமைத்துப் போராடுகின்றனர், இப்போது இந்த டாங்கி எதிர்ப்பு படையும் புதிதாக இணைக்கப்பட்டுள்ளது என ஏஜென்ஸி செய்திகள் இது குறித்து கருத்து வெளியிட்டன.

மூதூரில் ஊரடங்கு

மூதூரில் நேற்று மாலை முதல ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. ஊரடங்கு இன்று காலை நீக்கப்பட்டு மாலை மீண்டும் அமுல் செய்யப்படும் எனவும் இது பின்னர் மறு அறிவித்தல் வரை நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் திருவனந்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில்
23-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது